**தலைப்பு 221 – தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தொழில் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 221 – தொழில் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 03 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தி முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.8 |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.2.1(ஆ) |
| | | 3. | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள். | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை<br>2. பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1(ஆ)<br>2.2 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | இணக்கமின்மை | 2.3 |
| 128(1)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் வினியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளகச் சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம் முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப் படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கின் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத்துவ குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப் படாமை | 2.8 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப் படாமை | 2.2.1(ஆ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.2.1 செய்பணிகள் நிறைவேற்றாமை

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தினால் 143 பிரதான செய்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் 139 செய்பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள் மற்றும் அதற்காக கூட்டுத்தொகை ரூபா 56.025 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

(i) மீளாய்வாண்டின் போது இரத்தினபுரி, பதுளை மற்றும் ஹட்டன் தொழில் அலுவலகங்களின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 65 மில்லியனுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 75 சதவீதம் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பெறுகை விடயங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள பின்வரும் கருமங்கள் திட்டமிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| கருமம் | மதிப்பீட்டுத் தொகை | மேற்கொள்ளப் பட்ட தொகை | மேற்கொள்ளப் படாத தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 40 கூட்டு உடன்படிக்கைகள் வர்த்தமானியில் பிரசுரித்தல் | 40 | 17 | 23 | 57.50 |
| வழக்குத் தாக்கல் செய்தல் | 17 | 09 | 08 | 47.00 |
| வேலை சுற்றாடலை ஆய்வு செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 110 | 65 | 45 | 41.90 |
| தொழில் விசாரணைகள் | 82,028 | 29,611 | 60,669 | 73.96 |
| ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களின் விரல் அடையாளங்களை பதிவு செய்தல் | 50,000 | 12,600 | 37,400 | 74.80 |
| வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் அறவீடு செய்வதற்கு எதிர்பார்த்த தொகை | ரூபா. 500,000 | ரூபா 62,501 | ரூபா 437,499 | 87.50 |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

(i) கைத்தொழில் பாதுகாப்பு பிரிவினால் திடீர் விபத்துக்கள் இன்றிய சுதந்திர வேலை சுற்றாடல் ஒன்றினை ஏற்படுத்துவதற்கான பாதுகாப்பு சுகாதாரம் மற்றும் விபத்துக்கள் தொடர்பான 6400 விசாரணைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 1457 விசாரணைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் கைத்தொழில் மற்றும் தொழிற் பயிற்சி மாணவர்களுக்காக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 10 OSH கருத்தரங்குகளில் 04 நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழில் உத்தியோகத்தர்களின் விசாரணைகள் மற்றும் வழங்குகளை கணினி மயப்படுத்துவதற்காக கணினி நிகழ்ச்சித் திட்டமொன்று 2010 ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2017 ஆண்டு இறுதி அளவிலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக செயற்பட்டிருக்காததுடன் இந்த முறைமைக்கு வழக்குத் தகவல் தொடர்பாக 2209 தொகையும், முறைப்பாடுகள் தொடர்பாக 1045 தொகையும் தொழிலாளர் விசாரணைகள் தொடர்பாக 53140 தொகைத் தகவல்களை உட்படுத்தி இற்றைவரைப்படுத்தியிருக்கவில்லை. மேலும், மாவட்ட தொழிற்சாலை பரிசோதகர் பொறியியலாளர் அலுவலக உத்தியோகத்தர்களின் பிரயாண நிகழ்ச்சித் திட்டம் மற்றும் திடீர் விபத்து அறிக்கைகளை உட்படுத்துவதற்காக பொறியியல் பரிசோதனை மொடியூலர் அறிமுகப்படுத்தி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 4835 விசாரணைகளில் மீளாய்வாண்டு அளவிலும் 38 அறிக்கைகள் மாத்திரம் முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

(i) 20 கழிவறை முறைமைகள் நிர்மாணிக்கும் ரூபா 49,400,308 தொகைக்கான ஒப்பந்த வேலை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த போதிலும் அவற்றில் 12 பூர்த்தி செய்து மீதியான 08 கைவிடப்பட்டிருந்தது. அதனை 2015 ஆண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கியிருந்தது. அந்த 08 கழிவறை முறைமைகளில் 06 மீளாய்வாண்டு இறுதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆண்டின் போது ரூபா 3,901,733 தொகை பெறுமதிக்கு தொழிற் திணைக்களத்தின் கூரையினைத் திருத்தும் வேலை அரச பொறிறியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த போதிலும் அந்த வேலை உரிய முறையில் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. ரூபா 22,940,148 தொகைக்கு அவ்விடயம் மீண்டும் கட்டிடத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அவ் விடயத்திற்காக ரூபா 12,478,690 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.2 பெறுகை செய்முறையினூடாக பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்**

**2.2.1 பெறுகையை திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தில் அடங்கியிருக்காத 01 பல்லூடக இயந்திரம் மற்றும் 150 கடமை பிரயாணப் பைகள் ரூபா 1,121,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட காலச் சட்டகத்தில் பண்டங்கள் கொள்வனவு செய்திருக்காததுடன் மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 22,250,000 இற்கான தொகையில் 2017 நவம்பர் 15 திகதி அளவில் ரூபா 4,374,595 பயன்படுத்தப்பட்டிருந்தது. அது 19.7 சதவீதமாகக் காணப்பட்டதுடன் பெறுகை தொகையில் 75.69 சதவீதமும் இறுதி 1½ மாதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.2 பெறுகை செய்முறையை செயற்படுத்தல்**

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் வழங்குவதற்காக சேவை இல்லம் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் ரூபா 7,891,010,136 இற்கான தொகைக்கு ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தவேலை கம்பனி வழங்கியிருந்த ரூபா 50 மில்லியன் பெறுமதிக்கான விலைமனு பிணைமுறி (Bild Security) ஆகிய இலங்கை வங்கியில் இருந்து பெற்றிருந்ததுடன் அது பங்குடைமையின் பேரில் அல்லாமல் ஒரு பங்காளி ஆகிய Sarpooji Pallonji Mid East LLC என்ற பேரில் பெறப்பட்டிருந்தது. நிர்மாண வேலை பொறியியல் பயிற்சி வழங்கும் நிறுவனத்தின் (ICTAD) ஒப்பந்த வேலை வழிகாட்டல் கோவையின் 1 ஆம் பகுதியில் C 17.3 பந்தியின் பிரகாரம் மேற்கூறிய பாதுகாப்பு முறி பங்குடைமை பேரில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அதன் படி விலைமனு மதிப்பாய்வின் போது இரத்து செய்யப்பட வேண்டிய நிறுவனம் ஒன்றிற்கு நிர்மாண வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த தொழில் செயலக கட்டிடத்தின் ரூபா 21,001,636 இற்கான கூரை திருத்தவேலை ஒப்பந்தவேலை அலுவல்களை புறக்கணித்தல் தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவுகள் 8.11.4(ஆ), 8.11.5(அ)(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) தொழில் செயலகத்தின் யன்னல்களை திருத்துவதற்காக ரூபா 13,514,028 இற்கான ஒப்பந்த வேலை தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 8.12.2 இன் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யதமைக்கான சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டவை

**(அ) வாகனப் பயன்பாடு**

பானந்துறை மாவட்ட தொழில் அலுவலகத்தினால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம் ரூபா 313,667 தொகை செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

ரூபா 2,500,000 பெறுமதியான 03 வாகனங்கள் 2015 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவை பாதுகாப்பற்ற நிலையில் அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) **வெளித் தரப்பினருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

திணைக்களத்தினால் பெறுமதியினை உறுதிப்படுத்தியிருக்காத 14 சொத்து விடயங்கள் 2015 ஆண்டின் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 2.4 ஈடுபாட்டுப் பொறுப்பும் மற்றும் பொறுப்பும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **வருடாந்த பாதீட்டு வரையறையினை மிகைத்து ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்**

2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 02(அ) இற்கு இணங்காமல் 05 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 180.9 மில்லியன் இற்கான தேறிய ஏற்பாடுகளில் கூட்டுத்தொகை ரூபா 15.4 மில்லியனினால் மிகைத்து ரூபா 21.8 மில்லியனிற்கான ஈடுபாட்டு பொறுப்பு ஒன்றினை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

### 2.5 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரிசெய்திருக்காத பந்திகளினுடன் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 3.12(ஏ)(i,ii,iii,iv) | LISA (தொழில்ஆய்வு, முறைப்பாடு மற்றும் வழக்குகள் கணினி மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்) |
| 2016 | 3.8(அ)(viii) | முறைமைக்கு முறை சார் விதமாக தரவுகளை உட்படுத்தாமை மற்றும் டப்(Tab) கணினி பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்படல், மேலும், வழங்கியிருந்த டப் கணினிகளை நிகழ்ச்சித் திட்டத்திற்காக பயன்படுத்தி இருக்காததுடன் அவற்றை திருப்பிப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2.6 முகாமைத்துவத் திறமையின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1964 ஆகஸ்ட் மாதம் 31 திகதிய வழக்குத் தாக்கல் செய்யும் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 11 இல் 03 பிரிவின் பிரகாரம் நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்லும் உத்தியோகத்தர்களிடம் காணப்படும் அறிவு போதியளவினதாக காணப்படாமையினால் தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட ரூபா 231,082 இற்கான பெறுமதியுடைய வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தன. மேலும், 1941 இன் 27 ஆம் இலக்க சம்பள நிர்ணய சபை கட்டளைச் சட்டத்தின் மற்றும் தொழில் நியாய மன்றின் கட்டளைகளின் பிரகாரம் உரிய பணத்தை தொழில் வழங்குனரிடம் அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் அப் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் காலவிதிப்புக்கு இலக்காகிய ரூபா 2,558,977 இற்கான பெறுமதியான வழக்கு கோவைகள் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) தொழிற்சாலைகள் பாதுகாப்புத் தன்மை**

(i) தொழிற்சாலை கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான நியமங்கள் இற்றைவரை ஆக்கப்படாமை, நிர்மாண வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்படாமை, விபத்துக்களுக்கு முகங்கொடுத்த ஊழியர்களுக்கு போதியளவு நட்டஈட்டுத் தொகை ஒன்று பெற்றுக்கொடுத்தல், ஆபத்து நிலைமையுள்ள தொழிற்சாலைகள் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளல் மற்றும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகளுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளை சட்டத்தின் ஏற்பாடுகளை நாளது வரை ஆக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 28,854 தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பதிவு செய்திருந்ததுடன் அவற்றில் தொழிற்சாலைகள் தொகுதியின் கீழ்வரும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களம், கம்பனி பதிவாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகம் போன்ற நிறுவனங்களில் இருந்து தகவல்களைப் பெற்று அந்த நிறுவனங்களை பதிவு செய்வதற்காக தந்திரோபாய ரீதியான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) தொழிற்சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் நிர்வாகம், ஒழுங்குபடுத்தல் என்பன தொழிற்சங்க பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்/ சம்மேளனங்கள் எண்ணிக்கை 1668 தொகையாகும். வருடாந்த பதிவு செய்தலை புதுப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 1437 தொழிற்சங்கங்கள் பதிவு செய்தலை புதுப்பித்திருக்கவில்லை.

(ஈ) சேவை இல்லக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 7,169 இற்கான நிர்மாண வேலை ஒப்பந்த உடன்படிக்கைக்கு 2011 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அனுகியிருந்தது. இந்த நிர்மாண வேலைக்குத் தேவையான ரூபா 5,147 மில்லியனிற்கான தொகை ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,890.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்டிருந்த சிக்கல் தன்மையுள்ள சட்ட நிலைமை ஒன்றின் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து செலுத்திய தொகையை திறைசேரியினால் நிதியத்திற்கு

மீளளிப்பு செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் ரூபா 377.14 மில்லியன் தொகை 2018 அக்தோபர் அளவிலும் செலுத்தியிருக்கவில்லை. இந்த நிலைமையின் காரணமாக கொடுப்பனவு தாமதமடைந்ததனால் ரூபா 2.27 மில்லின் இற்கான தாமதக் கட்டணம் திணைக்களத்திற்கு நேரிட்டிருந்தது.

(உ) அனைத்து தொழில் அலுவலகங்களினால் நிறைவேற்றப்பட்ட செய்பணிகள் தொடர்பாக தரவுகளை சேகரித்தல் மற்றும் அந்த தரவுகளை கணினிமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2015 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட தரவுகளை சரியாக உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தினால் மீளாய்வாண்டு அளவிலும் அந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றியடையாமல் காணப்பட்டது.

(ஊ) 2012 ஆண்டின் போது திணைக்களத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு சர்வதேச தொழில் அமைப்புக்களினால் சமர்ப்பித்திருந்த தொழில்நுட்ப ஆவணத்தில் அடங்கிய வெளிக்கள பரிசோதனை தொடர்பான கொள்கையொன்றினைக் கட்டியெழுப்புதல் தொடர்பான விதப்புரை 2017 திசெம்பர் 31 அளவிலும் செயற்பட்டிருக்கவில்லை.

(எ) 2015 ஆண்டின் போது ரூபா 679,300 இற்கான கொள்வனவு செய்திருந்த இயந்திரம் ஒன்று செயற்படாதிருந்ததுடன், உத்தரவாத காலம் மிகைத்திருக்காத போதிலும் அதனை கொள்வனவு செய்த நிறுவனத்தின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் புதிய இயந்திரமொன்று ரூபா 219,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்தது.

(ஏ) அலுவலக வசதிகள் பெற்றுக்கொள்வதற்காக பெறுகை நடவடிக்கை முறையை கடைபிடிக்காமல் மற்றும் கூறுவிலைகள் அழைக்கப்பட்ட போது உரிய விவரக்குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்காமையால் அலுவலகத்திற்கு தேவையான வசதிகள் இன்றிய கட்டிடம் ஒன்றினை ரூபா 1,880,000 இற்கான வருடாந்த வாடகைக்கு பெறப்பட்டிருந்தது.

(ஐ) பானந்துறை தொழில் அலுவலகத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 7,329,818 தொகைக்கான 99 வழக்குகள் திறந்த பிடியாணை என காணப்பட்டதுடன் தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த திறந்த பிடியாணைகளை செயற்படுத்துவதற்காக விஷேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும் ஊழியர் சேமலாப நிதிகளை அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட ரூபா 17,811,209 தொகைக்கான 184 வழக்குகள் மீளாய்வாண்டின் போது செயற்படாமல் காணப்பட்டது. அந்த செயற்படாத மற்றும் திறந்த பிடியாணை எனக் காணப்படும் வழக்குகளை உயிர்புள்ளதாக ஆக்குவதற்காக அல்லது திறந்த பிடியாணையை செயற்படுத்தும் கால தாமதம் 5 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரை காணப்பட்டது.

(ஒ) 14 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை மற்றும் மிகை விதிப்பு அறவீடு செய்வதற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 12,072,646 தொகைக்கான 11 சந்தர்ப்பங்கள் பானந்துறை தொழில் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்டது. அந்த கால தாமதம் 50 நாட்கள் முதல் 373 நாட்கள் வரை காணப்பட்டது.

(ஓ) தொழில் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நீண்ட காலமாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாத நிறுவனங்களைப் பரிசோதனை செய்வதற்காக தெரிவு செய்யப்பட வேண்டுமென அறிவுரை வழங்கியிருந்த போதிலும் பானந்துறை தொழில் அதிகாரப் பிரதேசத்தில் 2017 ஆண்டு இறுதியில் இனங்கண்டிருந்த 9681 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் தொழில் உத்தியோகத்தர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,067 ஆகும். ஒட்டு

மொத்தமாக எடுத்த போது இந்த தொழில் அலுவலக அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் 89 சதவீதம் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) ஒரு தொழில் உத்தியோகத்தரினால் மாதாந்த நடப்பு பரிசோதனை 20 குறைந்த அளவு மேற்கொள்ளப்பட வேண்டுமென திணைக்கள சுற்றறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் யாழ்ப்பாண மாவட்ட தொழில் அலுவலகத்தை சேர்ந்த மூவர் மற்றும் வவுனியா கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய அலுவலகங்களின் ஒரு அலுவலர்கள் வீதம் இவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**2.7 பொதுமக்களுக்கு சேவையாற்றுதல்**

(அ) மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,047,487 தொகைக்கான 17 வழக்குகளின் கோவைகள் காணாமல் போயிருந்ததுடன் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 திகதி வரை எடுத்திருக்கவில்லை. 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தினால் தாக்கல் செய்திருந்த ரூபா 1,844,462,320 தொகைக்கான 3750 செயற்படாத வழக்குகளும், ரூபா 916,693,283 தொகைக்கான திறந்த பிடியாணை வழக்கு எண்ணிக்கை 2,563 தொகை காணப்பட்டதுடன் அவை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மேலும், பொதுமக்கள் முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தலில் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடயம் | மொத்த எண்ணிக்கை | நிறைவேற்றிய எண்ணிக்கை | நிறைவேற்றப்படாத எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|
| ஊழியர் விண்ணப்பங்களைத் தீர்த்தல் | 174 | 80 | 94 | 54 |
| தொழிற்சாலைகளை பதிவு செய்தல் | 28,382 | 2,923 | 25,459 | 89.7 |
| தொழில் பிணக்குகளை தீர்த்தல் | 547 | 108 | 439 | 80.3 |
| தொழில் நீதிமன்றில் தொழில் பிணக்குகள் மற்றும் கட்டாய தீர்த்தலுக்கு தொடர்புபடுத்திய பிணக்குகள் | 225 | 54 | 171 | 33.8 |
| விஷேட விசாரணை பகுதிக்கு தொடர்புபடுத்திய முறைப்பாடுகள் | 1,229 | 472 | 757 | 61.6 |
| மனித உரிமை ஆணைக்குழுவினால் கிடைத்த முறைப்பாடுகள் | 332 | 52 | 280 | 84.3 |
| கட்டளைகள் மூலம் விதிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை அறவீடு செய்தல் (சேவை முடிவுறுத்தும் பகுதி) | ரூபா 147,270,639 | ரூபா 181,496 | ரூபா 147,089,143 | 99.9 |

**2.8 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 1,100.6 | 1,016.1 | 84.5 | 7.7 |
| | மூலதன | 760.2 | 732.9 | 27.3 | 3.6 |
| | **மொத்தம்** | **1,860.9** | **1,749** | **111.8** | **6** |
| 2014 | மீண்டுவரும் | 1,138.5 | 1,117.1 | 21.4 | 1.9 |
| | மூலதன | 373.2 | 306.8 | 66.3 | 17.8 |
| | **மொத்தம்** | **1,511.7** | **1,424** | **87.8** | **5.8** |
| 2015 | மீண்டுவரும் | 1,411.2 | 1,357.9 | 53.3 | 3.8 |
| | மூலதன | 1,706 | 1,574.2 | 131.7 | 7.7 |
| | **மொத்தம்** | **3,117.1** | **2,932.1** | **185** | **5.9** |
| 2016 | மீண்டுவரும் | 1,489.9 | 1,453.2 | 36.7 | 2.5 |
| | மூலதன | 5,060.7 | 3,472 | 1,588.7 | 31.4 |
| | **மொத்தம்** | **6,550.6** | **4,925.1** | **1,625.4** | **24.8** |
| 2017 | மீண்டுவரும் | 1,505.2 | 1,452.6 | 52.7 | 3.5 |
| | மூலதன | 3,607.3 | 2,450.8 | 1,156.5 | 32.1 |
| | **மொத்தம்** | **5,112.6** | **3,903.3** | **1,209.2** | **23.7** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஏற்பாடு செய்திருந்த ஏற்பாடுகள் பயன்படுத்தாமை**

மூலதன செலவு விடயம் ஒன்றிற்காக ஒதுக்கியிருந்த ரூபா 1 மில்லியனிற்கான மொத்த தேறிய ஏற்பாடுகளில் இருந்து எதனையும் பயன்படுத்தாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

15 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 16.2 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிரந்ததுடன் அந்த செலவு விடயங்களுக்கு உரிய ஏற்பாடுகளில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 11.15 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் சேமிப்பு ஒதுக்கிய தேறிய ஏற்பாடுகளில் 16 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22101 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 75.00 | 71.90 | 60.00 | 69.20 | 265.00 | 237.60 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

**(அ) நிலுவை கடன் மீதியை அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,673,116 தொகையாக இருந்ததுடன், அந்த நிலுவை மீதி 01 வருடம் முதல் 38 வருடங்கள் வரையான காலவீச்சு ஒன்று கடந்திருந்த போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு இயலாமல் இருந்தது.

**(ஆ) இறந்த மற்றும் ஓய்வுபெற்ற மற்றும் சேவை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,347,936 தொகை 02 வருடங்கள் முதல் 27 வரையான காலங் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும் 05 கடன் கோவைகள் காணாமல் போயுள்ளன.

**2.10 கட்டுநிதிக் கணக்கு**

நிதிப் பிரமாணம் 371(2)(அ) பிரமாணங்களுக்கு முரணாக 04 சந்தர்ப்பங்களில் 04 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 100,000 தொகையினை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 856,751 இற்கான நிமித்த துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**2.11 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் காணப்படும் 02 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,005 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 223.19 மில்லினய் தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதி தினத்தில் உள்ளவாறு பொது வைப்பு மீதியில் அடங்கியிருக்காத ரூபா 12,936,819 இற்கான மீதியொன்று இனங்கண்டிருந்ததுடன் அது 2009 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட கணக்கு மீதி ஒன்றின் 6000-0-0-3-035 இன் கீழ் காணப்படும் மீதி ஒன்றாகும்.

(இ) நீதிமன்ற செயற்பாடுகளின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் சேவை நாடுனருக்கு உரிய ஏனைய படிகள் தொழில் ஆணையாளருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2009 முதல் 2017 வரை அறவிடப்பட்ட ரூபா 14.77 மில்லியன் தொகை வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.12 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

தொழிற் திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| வாக்குப்படி பேரேடு (புள்ளி விபரப் பிரிவு) | நி.பி. 449(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்கள் பதிவேடு | நி.பி. 211 | ஒதுக்கீட்டுக் கணக்கில் 03 செலவு விடயங்கள் தொடர்பான பொறுப்புக்கள் ஏதும் பதிவேட்டில் காட்டப்பட்டிருக்க வில்லை. |

**2.13 இணக்கமின்மைகள்**

**2.13.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) திணைக்களச் சுற்றறிக்கை | | |
| (i) 1964 ஆகஸ்ட் 31 திகதிய 11 ஆம் இலக்க வழக்குத் தாக்கல் செய்யும் திணைக் கள சுற்றறிக்கை 11 இன் 14 ஆம் பிரிவு | 1,081,329 | எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொழில் உத்தியோகத்தரினால் தனது ஆரம்ப பரிசோதனையின் போதே வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான அனைத்து சான்றுகளை சேகரிக்க வேண்டும் எனவும் மற்றும் தனக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்படுவதாக அறிந்த உடன் ஊழியர் ஒருவருக்கு சாட்சிகளை அழிப்பதற்கு அல்லது அடிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் சான்றுகள் சேகரிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ii) திணைக்கள சுற்றறிக்கை 10/2004 இன் பிரகாரம் | | தொழில் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் பரிசோதனை அறிக்கை 07 நாட்களுக்குள் அலுவலகத்திற்க ஒப்படைக்க வேண்டும். பரிசோதனை மேற்கொண்ட திகதியில் இருந்து 12 நாட்கள் மிகைக்க முன்னர் தொழில் தருனருக்கு பொருத்தமான அறிவுரைகள் அனுப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். அறிவுரை அனுப்பிய பின்னர் அறிவுரைகள் அனுப்பிய பின்னர் தொடர்செயல் நடவடிக்கை எடுத்து மீண்டும் 06 மாதங்களில் பரிசோதனைக்கு தொடர்பு படுத்த வேண்டும். எவ்வாறாயினும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்களில் மீண்டும் தொடர் செயல் நடவடிக்கை நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் 8 காணப்படல் மற்றும் அதன் காலதாமதம் 1-4 வருடங்கள் இடையே இருந்தது. |

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

### இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்கூறிய 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 1,135.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 210 | 154 | 56 |
| (ii) | மூன்றாம் நிலை | 668 | 526 | 142 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,771 | 1,355 | 416 |
| (iv) | ஆரம்ப நிலை | 489 | 460 | 29 |
| (v) | அமைய/ ஒப்பந்த | - | 11 | - |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நீண்ட காலமாக சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திணைக்களத்தில் சேவையாற்றும் நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக சேவையில் ஈடுபடுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | சேவையாற்றிய காலம் |
|---|---|---|
| நிருவாக சேவை | 15 | 5 வருடங்கள் முதல் 19 வரை |
| முகாமைத்துவ உதவியாளர் சேவை | 279 | 6 வருடங்கள் முதல் 38 வரை |
| பிராந்திய அலுவலக ஊழியர்கள் | 24 | 3 வருடங்கள் முதல் 15 வரை |

**(ஆ) பதவியணி பயிற்சி வழங்கல்**

திணைக்களத்தில் கடமையாற்றும் மொத்த பதவியணியினர் 2,495 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது 1,117 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் ஏதும் வழங்கியிருக்காததுடன் 70 உத்தியோகத்தருக்கு 8 மணித்தியாலங்களை விட குறைவாக பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.